[2009 ஜூலை 21

4. சிறப்புக் கவன ஈர்ப்பு

(அ) சிவகாசி வட்டம், நமஸ்கரித்தான்பட்டி, பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடி விபத்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிவகாசியில் நேற்று பட்டாசுத் தொழிற்சாலையில் ஏற்பட்ட விபத்தில், 6 பேர் உயிரிழந்தது மற்றும் பலர் காயமடைந்தது குறித்து, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக திரு. ஜி.கே. மணி, திரு. தி. வேல்முருகன், திரு. அ. தமிழரசு, திரு. பெ. கண்ணன், திரு. கோ. எதிரொலி மணியன், டாக்டர் க. நெடுஞ்செழியன், இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக செல்வி கே. பாலபாரதி, திரு. என். நன்மாறன், திரு. கே. மகேந்திரன், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், திரு. ஆர். ஞானதாஸ், திரு. ரா. வரதராஜன் ஆகியோர் விதிகள் 55 மற்றும் 56–ன்கீழ் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். இதைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். அறிவிப்புக் கொடுத்தவர்கள் இதுகுறித்து கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரலாம். (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது நான் மாண்புமிகு உறுப்பினர்கள் சார்பாகக் கேட்டுக்கொள்கின்றேன். இந்த விருதுநகர் நிகழ்ச்சியைப்பற்றிப் பேசுவதற்கு எழுதிக் கொடுத்திருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களையும் கேட்டுக்கொள்கின்றேன். இன்றைக்கு அவையின் கூட்டம் மாலை வரையிலே நீடிக்குமா என்ற சந்தேகத்திலே நாம் இப்பொழுது தொடங்கியிருக்கிறோம். அவை உறுப்பினர்களெல்லாம் எதிர்பார்க்கக்கூடிய நாள், இந்த நாள். எனவே, இந்த நாளில் வேறு வேலைகளில் கவனம் செலுத்தாமல், அந்தப் பணியிலே எல்லோரும் கவனம் செலுத்துவதற்கு ஏதுவாக, அவர்களுடைய வேலைகளையெல்லாம் நானே ஏற்றுக்கொண்டு, இந்த விருதுநகர் சம்பவத்தைப்பற்றி, சிவகாசி வட்டத்தில் நடந்த சம்பவத்தைப் பற்றி, இங்கே அறிக்கை ஒன்றைத் தருகின்றேன்.

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், நமஸ்கரித்தான்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீகிருஷ்ணா ஃபயர் ஒர்க்ஸ் என்னும் வெடிபொருள் தொழிற்சாலையில் 20–7–2009 அன்று காலை 10–30 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

2009 ஜூலை 21] [கலைஞர் மு. கருணாநிதி]

இந்த விபத்தில் இன்று காலை வரை, 3 பெண்கள் உட்பட 10 பேர் கடுமையான தீக்காயம் காரணமாக இறந்துள்ளார்கள். மேலும், பதின்மூன்று பேர் படுகாயம் அடைந்து, உயிருக்கு ஆபத்தான நிலையிலே இருக்கிறார்கள். இவர்கள் மதுரை இராஜாஜி மருத்துவமனையிலும், மதுரையிலே உள்ள இரண்டு தனியார் மருத்துவமனைகளிலும் மற்றும் சிவகாசியிலுள்ள அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளிலும் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள். சிலருடைய நிலைமை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது. வேறு சிலர் 30 சதவிகிதத்திற்கு மேல் தீக்காயம் அடைந்து சிவகாசி அரசு மருத்துவமனையிலே சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

நேற்றையதினம் இந்தச் சம்பவம் குறித்துக் கேள்விப்பட்டதும், அந்த மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர்களான திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், திரு. தங்கம் தென்னரசு ஆகியோரைச் சம்பவம் நடந்த இடத்திற்கு அனுப்பி, இடத்தைப் பார்வையிடச் செய்ததோடு, பாதிக்கப்பட்டவர்களுக்கும், அவர்தம் குடும்பத்தாருக்கும் ஆறுதல் கூறச் செய்தேன்.

அவர்கள் இருவரும் அங்கே சென்றுவிட்டு, இன்று காலையில்தான் சென்னை திரும்பியுள்ளார்கள். இதுகுறித்து, மாவட்ட ஆட்சியரோடும் தொடர்பு கொண்டு பேசி, நிவாரணப் பணிகளை மேற்கொள்ளச் செய்ததோடு, அறிக்கையும் பெறப்பட்டுள்ளது. காயமடைந்தவர்களுக்குச் சிறப்பான சிகிச்சைகள் வழங்கவும் ஆணையிடப்பட்டுள்ளது.

முற்பகல் 9–50

இந்தத் தொழிற்சாலை பெற்றுள்ள அனுமதிப் படிவம் 11, உரிமம் எண் 51/90 ஆகும். இதன் உரிமைதாரர் கே.ஏ.ஆர். ராதாகிருஷ்ணன் ஆவார். இந்தத் தொழிற்சாலையின் உரிமம் 31–12–2011 வரை புதுப்பிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொழிற்சாலையில் 62 பணிக்கூடங்களில் சுமார் 200 தொழிலாளர்கள் பணிபுரிந்து வந்தனர். இந்த விபத்துத் தொடர்பாக தொழிற்சாலையின் படைக்கலச் சட்ட படிவம் 11, உரிமம் எண் 51/90–ஐ படைக்கலச் சட்ட விதிகள் பிரிவு 11 (3) (ஆ)–ன்படி தற்காலிக நிறுத்தம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும், இந்த விபத்து குறித்து காரணம் மற்றும் சூழ்நிலைகளை அறியும்பொருட்டு இந்திய வெடிபொருள் சட்டம், 1984, பிரிவு 9 (1)–ன்கீழ் கூடுதல் மாவட்ட நீதித் துறை நடுவர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களின் விசாரணைக்கு

உத்தரவிடப்பட்டுள்ளது. மாநிலத்திலுள்ள அனைத்து வெடிபொருள் தொழிற்சாலைகள் மற்றும் தொழிற்சாலையில் அமைந்துள்ள கிட்டங்கிகளைப் பார்வையிட்டு, வெடிபொருள் உரிம நிபந்தனைகளின்படி தீத்தடுப்பு மற்றும் பாதுகாப்புச் சாதனங்கள் முறையாக நிறுவப்பட்டுள்ளனவா என்பதையும் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

சிவகாசி விபத்தில் இறந்தவர்கள் அனைவரும் வறிய நிலையில் உள்ளவர்கள் என்றும், கூலி வேலை செய்து பிழைப்பவர்கள் என்றும், அவர்களில் இறந்தவர்கள் குடும்பத்திற்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதமும், படுகாயம் அடைந்தவர்களுக்கு தலா ரூ.50,000 வீதமும், 30 சதவீதம் தீக்காயம் அடைந்த இரண்டு பேருக்கு தலா 25,000 ரூபாய் வீதமும் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து உதவித் தொகை வழங்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சியர் அறிக்கை அனுப்பியுள்ளார். அதனை ஏற்று, அவ்வாறே அவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படும் என்று அறிவித்து, இறந்தவர்களின் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலை என் சார்பிலும், இந்த அவையோர் சார்பிலும் தெரிவித்து அமைகிறேன்.

5. தகவல் கோரல்

(அ) மேட்டூர் தொகுதி, தீ விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி பட்டாசுத் தொழிற்சாலையில் உயிரிழந்தவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதி வழங்கியிருக்கிறார்கள். அதைப்போல, இந்த சட்டமன்றக் கூட்டத்தொடரின்போது, ஏற்பட்ட பல இழப்புகளுக்கெல்லாம் நிதி வழங்கியிருக்கின்றார்கள். எங்களுடைய சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதியிலேகூட, நான்கு நாட்களுக்கு முன், எரிவாயு உருளை, கேஸ் சிலிண்டர் வெடித்து தீ விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்தார்கள். நிதியுதவி கோரி மனுகூடக் கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணை உள்ளம் கொண்டு, இறந்தவர்களின் குடும்பங்களுக்கு நிதியுதவி வழங்குமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.